# 06 குடும்பம்


## அறிமுகம்

நாம் முதலில் அங்கத்துவம் பெறுவதும், நீண்டகாலம் அங்கத்தவராக இருப்பதும், தனிமனித விருத்தியில் செல்வாக்கு செலுத்துவதும் குடும்பமாகும். நாம் குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் குடும்பத்தில் எமக்குள்ள உரிமைகள், கடமைகள், பொறுப்புக்கள் ஆகியவற்றைத் தெரிந்து, சிறந்த முறையில் செயலாற்றி சமூகத்தில் நற்பிரஜையாக விளங்குவதற்கு தேவையான திறமையை வளர்த்து கொள்ள இவ் அத்தியாயம் உதவும்.

## 6.1 குடும்பம்



குடும்பம் சமூகத்திலுள்ள மிகச்சிறிய அலகாகும். ஒரு பொது வசிப்பிடத்தில் பல சமூக அங்கத்தவர்கள் கூடி வாழ்வதே குடும்பத்தின் பொது இயல்பாகும். குடும்பமென்பது பெரும்தொகுதி யொன்றிலுள்ள சிறியதும் குறிப்பானதுமான ஒரு அலகாகும். ஆரம்பகால சமூக அமைப்பிலும் நாம் குடும்ப அலகைக் காணலாம். தன்னைப் பற்றியும் உலகைப் பற்றியும் நல்ல சிந்தனைகளை உருவாக்குவதற்கு உதவும் முதன்மையானதும், இயல்பானதுமான அமைப்பு குடும்பமாகும். நிலையான குடும்பங்களின் மூலமே நிலையான சமூகம் கட்டியெழுப்பப்படும்.



நாம் ஒவ்வொருவரும் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு குடும்பத்தின் அங்கத்தினராக இருக்கின்றோம். எமக்குத் தேவையான உணவு, உடை, கல்வி, பாதுகாப்பு, அன்பு, பாசம் என்பன குடும்பத்தின் மூலமே கிடைக்கின்றது.

நாம் குடும்பத்தின் மூலமே சமூகத்தையும் உலகையும் அறிந்து கொள்கிறோம். குடும்பச் சூழல் ஆரோக்கியமாக இருந்தால் தான் உடல், உள ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்கும். எமது வாழ்க்கையில் பெரும்பகுதி குடும்பத்திலேயே கழிக்கப்படுகின்றது. சமூகத்தில் திறமையான மனிதனாக வருவதற்கான பழக்க வழக்கங்கள் குடும்பத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. குடும்பமென்பது ஒரு வீட்டில் வாழும் தந்தை, தாய் பிள்ளைகள், உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து வாழ்வதையே குடும்பமெனலாம். ஆரோக்கியமான குடும்பமென்பது பிரச்சினைகள் அற்று மகிழ்ச்சியாக வாழ்வதையே குறிக்கும்.

**ஆரோக்கிமான குடும்பத்தில் இருக்கவேண்டிய பண்புகள்**

- ☞ குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் ஒரு இடத்தில் வாழ்வர்.
- ☞ குடும்ப உறவு முறைகள் பேணப்படும்.
- ☞ குடும்ப அங்கத்தினரிடையே அன்பும் ஆதரவும் காணப்படும்
- ☞ ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பளிப்பர்.
- ☞ குடும்ப சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வர்.
- ☞ சிறந்த செயல்களைப் பாராட்டுவர். உணர்வுகளை மதித்து நடப்பர்.
- ☞ தேவைகளை அறிந்து செயற்படுவர்.
- ☞ குடும்ப உறுப்பினர்கள் ஆரோக்கியமாக வாழ்வர்.

**குடும்ப உறுப்பினராக இருப்பதால் தனி நபருக்கு கிடைக்கும் பயன்கள்**

- ☞ உணவு
- ☞ பாதுகாப்பு
- ☞ அன்பு
- ☞ கல்வி
- ☞ நல்ல பழக்க வழக்கங்கள்
- ☞ சம்பிரதாயங்களை அறிதல்
- ☞ பெரியோரை மதிக்கும் மனப்பாங்கு ஏற்படல்
- ☞ தலைமைதாங்கும் ஆற்றல்
- ☞ கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் தன்மை
- ☞ ஒய்வை சிறந்த முறையில் பயன்படுத்த பழகுவர்-போன்ற நற்பிரஜைகளாகுவதற்குரிய பண்புகளைப் பெறுவர்.





1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுவர் உரிமை சாசனம்; சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு குடும்ப பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி தன்னுடைய அவதானத்தைத் திருப்பியது; "குழந்தையொன்று பூரணமாக உடல் மற்றும் உள ரீதியாக வளர்ச்சியடைவதற்கு குடும்பத்தில் கிடைக்கும் மகிழ்ச்சி, அன்பு, நல்ல சூழ்நிலை என்பன வழிவகுக்கும்." என்பதாகும்.

## குடும்ப வகைகள்

வேகமான சமூக மாற்றம் காரணமாக, பல புதிய குடும்ப அமைப்புக்கள் தோன்றியுள்ளன. ஆயினும் எமது பிரதேசத்தில் காணப்படும் குடும்ப முறைகளை குடும்பத்தில் வாழ்கின்ற உறுப்பினர்களுக்கு அமைய இரண்டாக வகைப்படுத்தலாம்.

1. கருக்குடும்பம் (தனிக்குடும்பம்)
2. கூட்டுக்குடும்பம் (விரிந்த குடும்பம்)

## கருக்குடும்பம் (தனிக்குடும்பம்)

கருக்குடும்பமென்பது தாய்தந்தை பிள்ளைகள்மட்டும் வாழும் குடும்பமாகும். இன்று சமூதாயத்தில் தனிக்குடும்பத்தையே அதிகம் காண முடிகின்றது.

### கருக்குடும்பத்தின் இயல்புகள்

- ☞ கருக்குடும்பத்தில் பெற்றோர், பிள்ளைகள் மட்டும் உள்ளடக்கப்படுவர்.
- ☞ உதவி பெறுவது குறைவு
- ☞ சுதந்திரம் அதிகம்.

- ஆளுமை விருத்தியடையும்.
- பாச உணர்வுடையவராக இருப்பர்.
- பொறுப்புக்கள் குறைவு
- தனியாள் தன்மை அதிகம்.
- தாமே முடிவெடுக்க வேண்டும்.

## கூட்டுக்குடும்பம் (விரிந்த குடும்பம்)

கூட்டுக் குடும்பமென்பது தாய், தந்தை, பிள்ளைகள், உறவினர், பாட்டன், பாட்டி ஆகிய மூன்று தலைமுறை அங்கத்தவர்கள் கூடி வாழ்வதாகும். இவ் அமைப்பு தற்காலத்தில் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

### விரிந்த குடும்பத்தின் இயல்புகள்



- பெற்றோர், பிள்ளைகள், பாட்டன், பாட்டி, மாமா, மாமி, சித்தப்பா, பெரியப்பா போன்ற உறவுகளைக் கொண்டிருக்கும்
- முதியோரின் உதவிகள், ஆலோசனைகள், வழிகாட்டல் கிடைக்கும்.
- பாதுகாப்பு கிடைத்தல், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு விருத்தியடையும்.
- பகிர்ந்து உண்ணும் தன்மையுடையவராக இருப்பர்.
- பண்பாடு, விழுமியங்கள் பின்பற்றப்படும்.
- தனியாள் முடிவுகள் இருக்கமாட்டாது.
- எல்லோரது கருத்தும் முன்வைக்கப்படும் போது தீர்மானம் எடுப்பதில் சிரமம் ஏற்படும்.

பல குடும்ப அங்கத்தவர்கள் ஒன்றாக வாழ்வதால் அவர்களிடையே புரிந்துணர்வு ஏற்படும். ஒருவருக்கொருவர் உதவி செய்வதால் அன்பு, கருணை, இரக்கம் ஆகிய குணங்கள் விருத்திடையும். அதே சமயம் பெரியோர்கள் தமது தனிமையைக் குறைத்துக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. குடும்பத்தில் நிகழ்கின்ற வைபவங்களின் போது குடும்ப அங்கத்தவர்கள் வேலையை பகிர்ந்து செய்வதை நாம் காண-முடிகின்றது. வேலையை பகிர்ந்து செய்வதினால் நாம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. கூட்டுக் குடும்பத்தில் வாழும் பிள்கைள் தமது தாய் தந்தை, பாட்டா, பாட்டி மற்றும் உறவினர்களின் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் அறிந்துகொள்கின்றனர்.



தனிக்குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு தமது தந்தை, தாய், சகோதர சகோதரிகளின் அன்பும் பாதுகாப்புமே கிடைக்கும். ஆனால், கூட்டுக்குடும்பத்தில் பல மூத்த உறுப்பினர்கள் இணைந்து இருப்பதால் எல்லோரது அன்பு, பாதுகாப்பு, அரவணைப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

கூட்டுக் குடும்ப உறுப்பினரிடையே காணப்படும் சிறந்த தொடர்பாடல் மூலம் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற வகையில் பழகிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது.இவ்வாறாக நீங்கள் ஓர் கூட்டுக் குடும்பத்தில் வாழும் போது மூத்தோருக்கு உதவி செய்வதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். அதே போல் அவர்களிடமிருந்தும் உங்களுக்கு பல அறிவுரைகள் கிடைத்தி-ருக்கும். அவர்களுடன் நேரத்தை இனிமையாகக் கழிப்பதற்கும் வேலைகளில் ஈடுபடவும் உங்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

செயற்பாடு

தாத்தா, பாட்டி, தந்தை, தாய் ஆகிய குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களைப் பட்டியற்படுத்துக.

**குடும்ப அங்கத்தவர்கள் எதிர் நோக்கும் சவால்கள்.**

தற்கால சமூதாயத்திலே குடும்பமானது பல வகையான சவால்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. அவ்வாறான குடும்பத்தில் சவால்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள்

- ☞ பெற்றோர் வெளிநாடு செல்லல்.
- ☞ தாய், தந்தை இருவரும் வேலைக்குச் செல்லல்.
- ☞ தொடர்பு சாதனங்களின் தாக்கம்.
- ☞ போட்டிகள்.
- ☞ நகரமயமாதல்.
- ☞ போதைப் பொருட்பாவனை.
- ☞ கடத்தல், யுத்தம்.
- ☞ விபத்துக்கள்.
- ☞ திருமணவாழ்க்கை முறிவடைதல்.
- ☞ வறுமை - சிறுவர் துஷ்பிரயோகம்.

**சவால்களால் ஏற்படுகின்ற விளைவுகள்.**

- ☞ குடும்ப உறுப்பினரைப் பிரிதல்.
- ☞ குடும்ப உறுப்பினரிடையே தொடர்புகள் குறையும்.
- ☞ உளவியல் தாக்கங்கள் ஏற்படும்.
- ☞ வேலைப்பளு அதிகரிக்கும்.
- ☞ பிணக்குகள் அதிகரிக்கும்
- ☞ பொழுது போக்குகள் குறைவடையும்.
- ☞ அமைதியின்மை ஏற்படும்.
- ☞ பாதுகாப்பின்மை உருவாகும்.
- ☞ சொத்துக்கள் இழக்கப்படும்.
- ☞ சமூதாயச் சீரழிவுகள் ஏற்படும்.

## 6.2 குடும்ப அங்கத்தவர்களும் உறவினரும்





தனிக் குடும்பத்தின் உறுப்பினரான நீங்கள் வாழும் குடும்பத்தில் தாய், தந்தை, சகோதரர் சகோதரிகள் இருப்பர். அதே போல ஒரு கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினராயின் மேலும் பல உறவுகள் ஏற்படும். எப்படியாயினும் உங்களுக்கு உங்கள் தந்தை வழி உறவினருடனும் தாய்வழி உறவினருடனும் தொடர்புகள் ஏற்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்களை விழித்து அழைக்கும் சொற்களை அறிந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும். உறவினர்களிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்பவும் அவர்களிடையே கௌரவத்தை தக்கவைத்துக் கொள்ளவும் உறவு முறைச் சொற்கள் வழிவகுக்கும்
















உறவு முறைகள் (தமிழர்களின் முறை)
அப்பப்பா
அப்பம்மா
அப்பா
அம்மா
எனது அப்பா தந்தை
அக்கா
தம்பி, அண்ணா
தங்கை
அத்தை,
பிள்ளைகள்
மச்சான், மச்சாள்
சித்தப்பா, பெரியப்பா
பிள்ளைகள்
அண்ணா அக்கா தங்கை தம்பி
மாமி,
பிள்ளைகள்
மச்சான் மச்சாள்
அம்மம்மா
அம்மப்பா
அம்மா
அப்பா
எனது தாய் அம்மா
தங்கை
சித்தி
பிள்ளைகள்
அண்ணா அக்கா தம்பி,
அக்கா
பெரியம்மா
பிள்ளைகள்
அண்ணா அக்கா தம்பி, தங்கை
தம்பி அண்ணா
மாமா
பிள்ளைகள்
மச்சான் மச்சாள்
எனது சகோதரன்
மனைவி
அண்ணி மைத்துனி
பிள்ளைகள்
மருமக்கள்
எனது சகோதரி அக்கா, தங்கை
கணவன்
அத்தான் மைத்துனன்
பிள்ளைகள்
ஒன்றுவிட்ட மகன், மகள்

# உறவு முறைகள் (முஸ்லிம்களின் முறை)



**எனது தாய் உம்மா**

| | |
|---|---|
| அண்ணா | மாமா |
| தம்பி | மாமா |
| அக்கா | பெரியம்மா (பூமா) |
| தங்கை | சாச்சி |
| அம்மா | உம்மம்மா |
| அப்பா | அப்பா |

**எனது தந்தை வாப்பா**

| | |
|---|---|
| அம்மா | வாப்பம்மா |
| அண்ணா | பூவாப்பா |
| தம்பி | சாச்சா |
| அக்கா | தாத்தா |
| தங்கை | மாமி |
| அப்பா | அப்பா (முத்தா) |

உறவு முறையின் படி பல பிரதேசங்களில் பல பெயரைக் கொண்டு உறவினர்கள் அழைக்கப்படுவதை நீங்கள் பல சந்தர்ப்பங்களில் கண்டிருக்கக் கூடும்.

| உறவுகள் | அழைக்கும் முறை |
| --- | --- |
| தந்தை | அப்பா , வாப்பா |
| தாய் | அம்மா , உம்மா |
| பாட்டி | அம்மம்மா, வாப்பம்மா |
| பாட்டன் | பாட்டா, அப்பப்பா. பூட்டப்பா |
| மாமா | மாமா |
| மாமி | அத்தை, மாமி |
| சித்தப்பா | சித்தப்பா, சாச்சா |
| பெரியப்பா | பெரியப்பா, பூவாப்பா |
| பெரியம்மா | பெரியம்மா, பூமா |



குடும்பம் என்னும் சமூக அலகில் உறவுமுறைகளை அழைப்பதனால் உறுப்பினர்கள் பெறும் பயன்கள் பலவாகும். ஒற்றுமையைக் கட்டியெழுப்பல், பாரம்பரிய சம்பிரதாயங்களை அறிந்து கொள்ளல், அவற்றைப் பழகி அதன்படி நடத்தல், வளர்ச்சி பெறுதல், ஒருவருக்கொருவர் உதவி செய்தல், உதவிகளைப் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கும். குடும்ப உறுப்பினர் ஒருவரின் வாழ்வில் நடைபெறும் முக்கிய வைபவங்களில் பல உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். உங்கள் குடும்ப உறவினர்கள் உங்களது குடும்பத்திற்கு உதவி செய்த சந்தர்ப்பங்களையும் உங்களது குடும்ப அங்கத்தவர்கள் உறவினருக்கு உதவி செய்த சந்தர்ப்பங்களையும் எண்ணிப் பாருங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

செயற்பாடு

01. பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| உமது தந்தையின் | உமக்குள்ள உறவு | உமது தாயின் | உமக்குள்ள உறவு |
|---|---|---|---|
| தாய் | ..................... | தாய் | ..................... |
| தந்தை | ..................... | தந்தை | ..................... |
| அண்ணா | ..................... | அண்ணா | ..................... |
| தம்பி | ..................... | தம்பி | ..................... |
| அக்கா | ..................... | அக்கா | ..................... |
| தங்கை | ..................... | தங்கை | ..................... |

2. அம்மா அப்பா முதலிய குடும்ப அங்கத்தவர்களின் குணங்களை எடுத்துக்காட்டும் பாடல்களைச் சேகரிக்கவும்
3. வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள உறவினருடன் நீங்கள் தொலைபேசி மூலமாக தொடர்புகளை மேற்கொள்கின்றீர்கள். அவ்வாறானதொரு அழைப்பின்போது மேற்கொள்ளும் உரையாடலை எழுதுக.

## 6.3 குடும்பத்தில் காணப்படும் பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும்

### பழக்கவழக்கங்கள்



மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் கடைப்பிடிக்கப்படுகின்ற பழக்க-வழக்கங்கள் குடும்பப் பின்னணி-யையும் சூழலையும் பொறுத்து அமைகின்றது. வீடு குடிபுகுதல், குழந்தைக்குப் பெயர் சூடல், ஏடு தொடங்குதல் போன்ற சந்தர்ப்-பங்களில் வெவ்வேறு விதமான



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. சம்பிரதாய நிகழ்ச்சிகளில் கடைப்பிடிக்கப்படும் பழக்கங்கள், உங்கள் பிரதேசம், இனம், மதம் என்ற அடிப்படையில் வேறுபட்டிருப்பதை நீங்களே உங்கள் சூழலில் அவதானிப்பீர்கள்.விசேட வைபவங்கள் திருமண விழாக்கள், துக்ககரமான நிகழ்வுகள், விசேட கலாசார வைபவங்களில் இவ்வாறான ஒழுக்கங்களை கடைப்பிடிப்பதற்கு நாம் பழகி இருக்கின்றோம். இலங்கையில் பல்வேறுப்பட்ட மக்கள் பிரிவுகள், இனம், கலாசார பிரிவுகள் காணப்படுகின்றன. அவ்வாறான பிரிவுகளுக்கு அமைய பழக்கவழக்கங்களும் வேறுபடுகின்றது.



**செயற்பாடு**

(01) உங்களது பிரதேசத்தில் புது மனை குடி புகுதலுக்கு கடைப்பிடிக்கப்படும் பழக்கவழக்கங்களைப்பற்றி பெரியோர்களிடம் விசாரித்து அறிந்து கொள்ளவும்.

(02) புதுவருட தினத்தில் உங்கள் குடும்ப அங்கத்தவர்கள் கடைப்பிடிக்கும பழக்கவழக்கங்களைப் பார்த்து அவற்றை சித்திரமாக வரையவும்

### சம்பிரதாயம்

ஒரு குடும்பத்தில் பரம்பரை பரம்பரையாக மிக நீண்ட காலமாக கடைப்பிடித்துக் கொண்டு வரப்படுகின்ற நடைமுறைகள் "சம்பிரதாயங்கள்" எனப்படுகின்றன. உங்களது குடும்பத்தில் கடைப்பிடிக்கப்படுகின்ற சம்பிராதயங்களைப்பற்றி சற்று சிந்தித்துப்பாருங்கள்.

அநேகமான வீடுகளில் சிறுவர்கள் வெளியே கிளம்பும் போது அவர்களை வீட்டுப்பெரியவர்கள் ஆசிர்வதித்து அனுப்புவதைக் காணலாம். இதுவும் ஒரு சம்பிரதாயமாகும். அதே போல தினமும் சமய வழிபாட்டில் ஈடுபடுவதும் சம்பிரதாய நிகழ்வில் அடங்கும்.

விசேடமான சமய தினங்களில் குடும்பத்தவர்கள் அனைவரும் சேர்ந்து வணக்க ஸ்தலங்களுக்குச் செல்லுதல், வழிபாடுகளில் ஈடுபடல் என்பன குடும்பத்தவர்கள்

சேர்ந்து செயற்படும் இன்னுமொரு சம்பிரதாயமாகும். உணவு உண்ணும் போது எல்லோரும் சேர்ந்திருந்து உணவு உட்கொள்ளும் முறை அநேகமாக பல வீடுகளில் காணப்படுகின்றது.

குடும்பத்தவர்கள் இவ்வாறான சம்பிரதாயபூர்வமான வழி முறைகளைக் கடைப்பிடித்தலானது, குடும்பத்தின் மதிப்பையும் நன்மையையும் மேலோங்கச் செய்கின்றது. சிறுவர்களே! நீங்களும் இவ்வாறான பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமாக எமது நாட்டின் சிறந்த பிரஜையாக உருவாக முடியும். பிரதேசவாரியாகவும், இன, மத ரீதியாகவும் அவர்களுக்கிடையிலான சம்பிரதாயங்கள் வேறுபடுவதுண்டு.

**செயற்பாடு**

(01) **அன்றாட வாழ்வில் உங்கள் குடும்பத்தவர்கள் பின்பற்றும் சம்பிரதாயங்களை எழுதுக.**

(02) **இவ்வாறான பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்களினால் உமது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்படும் நன்மைதீமைகள் பற்றி கலந்துரையாடவும்.**

## உரிமைகள்

குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் மகிழ்வுடன் வாழ்வினைக் கழிப்பதற்காக குடும்பத்திலிருந்து தனக்குக் கிடைக்கும் விடயங்கள் உரிமைகளாகும்.



சுகாதார நலன் நிறைந்த வாழ்க்கை ஒன்றைப் பெறுவதற்கும், உணவு பெறுதல், பாதுகாப்பு பெறுதல் என்பன ஒரு குடும்பத்தவர் என்ற முறையில் பெறக் கூடிய உரிமைகளாகும். குடும்ப அங்கத்தவரிடம் இருந்து அன்பு, பாசம், இரக்கம், கருணை என்பவற்றைப் பெறுதலும் ஓர் உரிமையாகும்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

குடும்ப உறுப்பினர் என்ற வகையில் கல்வியைப்பெற்றுக் கொள்ளும் உரிமை, மற்றும் அதற்குத் தேவையான வசதிகளைப் பெறுதல், உங்களுக்குள்ள உரிமைகளுள் ஒன்றாகும். கல்வியைப் பெறும் உரிமை மட்டுமன்றி அதன் மூலமாக திறன்களை வளர்த்துக் கொள்ளவும், அவ்வாறு வளர்த்துக் கொண்ட திறன்கள் மூலமாக எதிர்காலத்தில் சிறந்ததொரு சமூகவாழ்வைப் பெறுவதற்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களுக்குச் சுதந்திரம் உண்டு. உங்களது ஓய்வினை சரியான முறையில் கழிப்பதற்கும், விளையாடுவதற்கும், சரியாகப் பயன்படுத்தவும், இம்சைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளவும் உரிமையுண்டு.

## பொறுப்பும் கடமையும்

ஒரு குடும்பத்தை முன்னேற்றுவதற்கு குடும்ப உறுப்பினர் எல்லோரதும் பங்களிப்பு அவசியமாகும். ஒற்றுமையாக ஒருவரையொருவர் புரிந்து செயற்படுதல் எல்லோரது கடமையும் பொறுப்புமாகும். குடும்பத்தவர்களிடையே நலமான தொடர்பாடலைக் கட்டியெழுப்பல் தொடர்பாகவும், குடும்பத்தினை உறுதியானதொரு நிலையை அடையச்செய்தல், எல்லாக் குடும்ப அங்கத்தவர்களின் பொறுப்பும் கடமையுமாகும்.



பிள்ளைகளைப் பராமரித்தல் அன்புடன் வழிநடத்தல் குடும்பத்தினருக்குப் பாதுகாப்பளித்தல், அரவணைத்தல், பணம் சம்பாதித்தல், கல்வியை வழங்கல், சிறந்த மனப்பாங்குகளை வளர்த்தல், ஒற்றுமையை வலியுறுத்தல், மூத்தோரை மதிக்கச் செய்தல், இரக்கம், பரிவு, கருணை ஆகிய பண்புகளை வளர்த்தல் கலாசாரத்தை வழங்குதல், தலைமைத்துவத்தை வழங்கல், சட்டங்களை மதிக்கச் செய்தல், சமூகத்தில் சிறந்த பிரஜையாக உருவாக்குதல் தாய் தந்தையரின் பொறுப்புக்களாகும்.

பெற்றோரை மதித்தல், பொறுப்புடன் செயற்படுதல், முதியோரைப் பராமரித்தல் உதவி செய்தல், குடும்பப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுதல், சகோதரர்களுக்கு வழிகாட்டுதல், முன்மாதிரியாக நடத்தல், கல்வி கற்றல், வீட்டு வேலைகளில் உதவி செய்தல், பணத்தை உரிய முறையில் செலவு செய்தல் என்பன சிறுவர்களாகிய உங்களது கடமையாகும்.

கல்வி பெறும் உரிமை இருக்கின்ற போது குடும்பத்தில் உங்களுக்குக் கிடைக்கின்ற கல்வி மூலமாக குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சிறந்ததொரு பிரதிபலிப்பை வழங்குதல் உங்கள் கடமையாகும்.



இத்தகைய நன்மைகள் நிலவ குடும்பத்திலுள்ள உறவு முறைகள் ஒழுங்காக அமைதல் முக்கியமாகும். குடும்ப அங்கத்தவர்களிடையே பரஸ்பரம் உதவுதல், ஒருவரையொருவர் மதித்தல், கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளல், அங்கீகரித்தல், பணிவு, பாதுகாப்பு முரண்பாட்டைத் தீர்த்தல் ஆகிய பண்புகள் காணப்படவேண்டும்.

**செயற்பாடு**

**குடும்ப அங்கத்தவர் என்ற வகையில் உங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளையும் பொறுப்புக்களையும் அட்டவணைப்படுத்துக.**

## 6.5 எமது குடும்பத்திற்கும் -அயற் குடும்பத்திற்கும் இடையில் நிலவும் தொடர்புகளின் முக்கியத்துவம்

உமது குடும்பத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் அயலவர்கள் எனப்படுவர். ஒருவர் தனித்து வாழ முடியாது. அதே போல் ஒரு குடும்பமும் தனித்து வாழ முடியாது. பரஸ்பர உதவி எல்லோருக்கும் அவசியமாகும். எனவே நாம் அயல் வீட்டாருடன் சுமுகமான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் தான் எமக்கு உதவி தேவைப்படும் போது அவர்களது உதவியைப் பெற முடியும். அவ்வாறே அவர்களுக்கும் நாம் உதவ முடியும்.



அயற் சமூகத்துடன் ஒத்து வாழும் போது தேவைகள் பல நிறைவேற்றப்படுதுடன் ஒத்துழைப்பும் சந்தோசமும் கிடைக்கின்றது. ஒரு குடும்பத்தில் இது போன்ற சந்தர்ப்பங்களில் இன்ப துன்பங்களில் உறவினர்கள் பங்கு கொள்வதைப் போல் அயலவர்களும் பங்குகொள்வர்.

**அயலவர்கள் ஒத்துழைப்பு வழங்கும் சந்தர்ப்பங்கள்**

- ☞ பிறந்தநாள் விழாவின் போது
- ☞ வீட்டு வேலைகளின் போது
- ☞ வயல் வேலைகளின் போது
- ☞ நோய் ஏற்படும் போது
- ☞ விபத்துக்கள் ஏற்படும் போது
- ☞ விழாக்கள் பண்டிகைகளின் போது
- ☞ இறப்புக்களின் போது

**இவ்வாறு அயலவர்களுடன் சேர்ந்து செயற்படும் போது எம்மிடம் பல நற்குணங்கள் வளர்கின்றது.**

- ☞ அர்ப்பணிப்புடன் செயற்படல்
- ☞ பொறுமை
- ☞ விட்டுக் கொடுக்கும் தன்மை
- ☞ நடு நிலையாகச் செயற்படல்
- ☞ உறுதியான மன நிலை
- ☞ இரக்கம், கருணை
- ☞ ஒத்துழைப்பு
- ☞ நம்பிக்கை

நாம் எமது குடும்ப உரிமைகளைப் பாதுகாப்பது போலவே அயலவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும். அயலவர்களின் வாழ்விற்கு இடையூறு ஏற்படுத்தாதவாறு வாழ வேண்டும். சட்ட விரோத தொழிலில் ஈடுபடல், வானொலி தொலைக்காட்சியை அதிக சத்தத்தில் வைத்தல், இரைச்சலான இயந்திரங்களை பாவித்தல், குப்பைகூளங்களை உரிய முறையில் அகற்றாமை என்பன அயலவர்களுக்கு தடையாக இருக்கும்.

**செயற்பாடு**

(01) அயல் வீட்டில் அவசர உதவி தேவைப்படும் போது உங்களது குடும்பத்தினர் செய்யக் கூடிய உதவிகள் எவை?

(2) உங்களது குடும்பத்திற்கு அயலவர்களினால் கிடைக்கப் பெற்ற உதவிகள் எவை?

## 6.6 ஒரு குடும்பத்தில் உருவாகும் சிறந்த பிரஜை கொண்டிருக்க வேண்டிய நற்பண்புகள்

குடும்பங்கள் பல ஒன்றிணைந்து சமூகமாகின்றது. சமூகத்தின் மிகச்சிறிய அலகு குடும்பமாகும். குடும்பம், சமூகம் என்பன நற்பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள் போன்றவற்றை எமக்கு கற்றுக் கொடுப்பதனால், நாம் நாட்டில் சிறந்த பண்புள்ள நற்பிரஜையாக உருவாகுகின்றோம். எமது நடத்தைகள் உயர்வாக இருந்தால் மட்டுமே நாம் சமூகத்தில் மதிக்கப்படுகின்றோம்.

**நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள்**

- பொறுமை
- அன்பு, இரக்கம் காட்டல்
- நீதியை மதித்தல்
- நம்பகத்தன்மை
- நடு நிலைமையாகச் செயற்படல்
- வளங்களை வீணடிக்காமை
- பொறுப்புக்களை நிறைவேற்றல்
- நடுநிலையாக செயற்படல்
- விட்டுக்கொடுத்தல்
- நேர்மை
- ஒழுங்கைப் பேணுதல்
- நட்புடன் இருத்தல்
- சூழலைப் பாதுகாத்தல்
- ஒழுக்கம்
- தலைமைத்துவத்தை மதித்தல்
- சூழலைப் பாதுகாத்தல்



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு

(01) குடும்பத்தில் சிறந்த பிரஜை என்ற வகையில் பல்வேறுப்பட்ட குடும்ப அங்கத்தவருடன் பழகும் வாய்ப்பு ஏற்படும் வெற்றியான வாழ்க்கை நடாத்துவதற்கு உங்களுக்குள்ள திறமையை அட்டவணைப்படுத்துக.

(02) கீறிட்ட இடத்தை நிரப்புக.

1. சமூகத்தின் மிகச்சிறிய அலகு ................................ஆகும்.
2. குடும்பத்தின் தலைவராக இருப்பவர் ............................... ஆவார்.
3. பெற்றோர், பிள்ளைகள் மட்டும் உள்ளடங்கிய குடும்பம் ........................... குடும்பமாகும்.
4. குடும்ப விருத்திக்கு அங்கத்தவர்களின் ........................... அவசியமாகும்.
5. சமூகம் எனப்படுவது பல ................................ சேர்ந்து வாழும் ஒரு தொகுதியாகும்.

(03) சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக

1. பெரியோரைக் கனம் பண்ணுதல் மாணவரின் கடமையாகும். ( )
2. நற்பண்புகளை உருவாக்கும் இடம் குடும்பமாகும். ( )
3. கருக் குடும்பத்தில் மூன்று பரம்பரையைக் கொண்ட அங்கத்தவர்கள் இருப்பார்கள். ( )
4. நாம் அயல் குடும்பத்துடன் ஒத்து வாழக்கூடாது. ( )
5. அப்பாவின் அண்ணா மாமா ஆவர். ( )

(04) குடும்ப உறுப்பினரின் கடமைகளை அட்டவணைப்படுத்துக.

| தந்தையின் கடமை | தாயின் கடமை | பிள்ளைகளின் கடமை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

## சாரம்சம்

☞ சமூகத்தின் மிகச் சிறிய அலகு குடும்பமாகும். குடும்பத்தை கருக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என இருவகைப்படுத்தலாம். குடும்ப அங்கத்தவர்களின் தன்மையைக் கருத்திற் கொண்டு நடத்தல் குடும்பத்தவர்களின் கடமையாகும். குடும்பத்தவர் என்ற வகையில் அவர்களுக்கு பல உரிமைகள் உண்டு. இவ்வுரிமைகளை அனுபவிக்கவும், கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பும் அவர்களுக்குண்டு. அயலவர்களுடன் சுமூகமான நல்லுறவைப் பேண வேண்டும். நல்ல மனிதர்களின் கூட்டால் நல்ல சமூகம் உருவாக்கப்படும். சிறந்த சமூகம் உருவாவதற்கு சமூகத்தின் பிரஜைகளிடையே நல்லுறவு காணப்பட வேண்டும். சமூகத்திற்கு நன்மையளிக்கும் குணங்கள் வளர்க்கப்பட நாம் முயற்சிகளை எடுக்க வேண்டும்.